<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:- திருமதி.எஸ்.சுகனியாஸ்ரீ,B.A.B.L (Hons), M.L., PGDAML
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் நாள் புதன்கிழமை

*<u>இ.ம.எண். 207/2024 in அசல் வழக்கு எண்: 332/2008</u>*

1. ராமதாஸ் (இறந்தார்)
2. கிரி
3. புனிதா ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

பொன்னம்பலசாமி மடம் என்கிற
KCT மடாலயம் அதன் மடாதிபதி … எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 06.08.2024-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.இராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சம்மந்தம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் உத்தரவு.

<u>உத்தரவு</u>

1. மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151-ன் கீழ் IA.82/2024 மனுவில் வழங்கிய உத்தரவு நகல் மனு CA.955/2024 மனுவில் நகல்கள் கிடைக்கப்பெற்று அதன் பேரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து stay பெறும்வரையில் அசல் வழக்கில் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கும்படிக்கு உத்திரவிடக் கோரி தாக்கல் செய்த மனு.

*<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>*

2. இம்மனுவின் 2ம் மனுதாரர் அசல் வழக்கில் 2-ஆம் வாதி என்றும், 3ம் வாதி எனது சகோதரி என்றும், அவருக்காகவும் வழக்கு நடவடிக்கைகளை 2-ம் மனுதாரர் தான் கவனித்து வருகிறார் என்றும், இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார் என்றும், மேற்படி இந்த நம்பர் அசல் வழக்கில் ஏற்றதை ஆற்றுகைக்கும் இதர பரிகாரங்களுக்காகவும் தாக்கல் செய்து இந்த அசல் வழக்கில் பிரதிவாதி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய IA.No.82/2024 நெம்பரில் மனு

தாக்கல் செய்ப்பபட்டு இந்த மனுவானது இருதரப்பு விசாரணைக்கு பிறகு கடந்த 2024 தேதியில் எதிர்பாராதவிதமாக தனக்கு விரோதமாக தள்ளுபடி ஆகிவிட்டதாகவும், மேற்படி உத்தரவின் பேரில் தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய நகல் மனு C.A.No.955/2024 தாக்கல் செய்து, மேற்படி உத்தரவு நகல் கிடைக்கப்பெறாமல் உள்ளது என்றும் எனவே சிதம்பரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் IA.82/2024இல் வழங்கிய உத்தரவு நகல் கிடைக்கப்பெற்று அதன் பேரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து உத்தரவு கிடைக்கப் பெறும் வகையில் அசல் வழக்கின் அனைத்து நடவடிக்கைகளையும் Stay செய்து கொண்டு மேல் உத்தரவு வழங்க வேண்டியுள்ளது என்றும், அப்படி இல்லாவிடில் மனுதாரருக்கு வீண் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், ஆகையால் தயவு செய்து சிதம்பரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் IA.82/2024 மனுவில் வழங்கிய உத்தரவு நகல் கிடைக்கப் பெற்று அதன் பேரில் சென்னை, உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல செய்து உத்தரவு கிடைக்கப் பெறும் வரையில் அசல் வழக்கில் அனைத்து நடவடிக்கைகளையும் Stay செய்து கொண்டு மேல் உத்தரவு செய்ய கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

*எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:*

3. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடிக்கு உகந்தது என்றும், மனுதாரர்க்ள தாக்கல் செய்த IA.82/2024 மனு சட்ட விதிகளின்படி சரியான முறையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அந்த சட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டி இந்த எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்தார் என்றும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு சட்ட பொருண்மைகளின் அடிப்படையில் அந்த மனு தள்ளுபடி செய்யபட்டது என்றும், எனவே மனுதாரர் சீராய்வு மனு தாக்கல் செய்தாலும் அவருக்கு கூடிவரக்கூடிய கட்சிகள் ஏதும் இல்லை என்றும், வழக்கு விசாரணையை முடிக்காமல் கால தாமப்படுத்துவதற்காகவே மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே நீதிமன்றத்தாரவர்கள் மனுதாரர்களின் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பும் வாதமும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. IA.82/2024 மனுவில் வழங்கிய உத்தரவு நகல் மனு CA.955/2024 மனுவில் நகல்கள் கிடைக்கப்பெற்று அதன் பேரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து stay பெறும்வரையில் அசல் வழக்கில் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கும்படிக்கு உத்திரவு பிறப்பிக்க கோரி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக இருந்த போது IA.No.82/2024 என்ற மனுவை வாதி தாக்கல் செய்திருந்தார். இரு தரப்பு விசாரணைக்கு பிறகு பிரதிவாதி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய IA.82/2024 நெம்பரில் மனு தாக்கல் செய்ய்பபட்டு இந்த மனுவானது இருதரப்பு விசாரணைக்கு பிறகு கடந்த 2024 தேதியில் எதிர்பாராதவிதமாக தனக்கு விரோதமாக தள்ளுபடி ஆகிவிட்டதாகவும், மேற்படி உத்தரவின் பேரில் தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய நகல் மனு C.A.No.955/2024 தாக்கல் செய்து, மேற்படி உத்தரவு நகல் கிடைக்கப்பெறாமல் உள்ளது என்றும், எனவே IA.82/2024 மனுவில் வழங்கிய உத்தரவு நகல் கிடைக்கப் பெற்று அதன் பேரில் சென்னை, உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து உத்தரவு கிடைக்கப் பெறும் வரையில் அல் வழக்கில் அனைத்து நடவடிக்கைகளையும் Stay செய்ய கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். வழக்கு விசாரணையை முடிக்காமல் கால தாமதப்படுத்துவதற்காகவே மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்துள்ளார். மனுதாரரால் குறிப்பிடப்படும் இடைமனு IA.82/2024 மனுவானது 5.4.2024 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது. உத்தரவு பெற நகல் மனு. 955/2024 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் தரப்பில் நீதிமன்ற நகல் பிரிவு 'A' Register-ஐ பரிசீலனை செய்ததில், அவைகள் மனுதாரரால் 21.6.2024 அன்று பெறப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. வழக்கு கோப்புகளை பரிசீலிக்கையில், மனுதாரர் இடைமனு IA.82/2024ல் உத்தரவு பெறப்பட்ட பின்னர், மனுதாரர் நகல் மனு பெற்ற பின்னரும் மனுதாரரால் சீராய்வு மனு தாக்கல் செய்ததற்கான எவ்வித ஆதாரங்களும் முன்னிலைபடுத்தாததாலும், போதிய கால அவகாசம் மனுதாரருக்கு வழங்கப்பட்டிருந்தும் மேல்முறையீட்டு நீதிமன்றம் மூலம் எவ்வித தடை உத்தரவும் இல்லாத நிலையில், அசல் வழக்கின் நடவடிக்கைகளை நிறுத்தக் கோரும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இதனால் மனுதாரரின் இந்த மனுவை அனுமதிப்பது என்பது நீதிக்கு உகந்ததாக இருக்காது என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியில், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 14.8.2024ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Suganiyasri)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.